## ஆசிரியர்கள் தகுதித்தேர்வு விலக்குத் தீர்மானம்!

# கண்துடைப்பு நாடகமாக மட்டும் இருக்கக் கூடாது!

## பள்ளிக்கல்வித்துறை முன்னாள் அமைச்சர் அன்பில் மகேஸ் பொய்யாமொழி அறிக்கை!



சென்னை, ஆக. 27 -

“ஆசிரியர்கள் தகுதித் தேர்வு விலக்குத் தீர்மானம் கண்துடைப்பு நாடகமாக மட்டும் இருக்கக் கூடாது” என்று முன்னாள் பள்ளிக் கல்வித்துறை அமைச்சர் அன்பில் மகேஸ் பொய்யாமொழி கூறியுள்ளார்.

இது குறித்து அவர் விடுத்துள் அறிக்கை வருமாறு:

‘ஆசிரியர்கள் தகுதித்தேர்வு விலக்கு தீர்மானம்’ தொடர்பாக த.வெ.க. அரசு கொண்டுவந்துள்ள தீர்மானத்திற்கு பிறகு தமிழ்நாடு முழுவதும் உள்ள ஆசிரியர் சங்கங்களிடம் பல்வேறு கேள்விகள் எழுந்துள்ளது. இந்த அரசு ஆசிரியர்கள் நலனில் இரட்டைவேடம் போடுகிறதா எனும் சந்தேகம் எழுந்துள்ளது. தீர்மானம் நிறைவேற்றியதற்கு முதல்நாள் சென்னை உயர்நீதிமன்றத்தில் ‘ஆசிரியர் தகுதித்தேர்விற்கான மதிப்பெண்களை குறைக்க முடியாது! அப்படி குறைத்தால் தேர்விற்கான மதிப்பு குறைந்துவிடும்’ என ஆசிரியர்களுக்கு எதிராக வாதாடியுள்ளது த.வெ.க. அரசு. ஆனால் அதற்கு மறுநாள் தீர்மானம் எனும் பெயரில் நாடகம் ஆடியுள்ளதா எனும் கேள்வி ஆசிரியப் பெருமக்களிடம் எழுந்துள்ளது.

2025 செப்டம்பர் 1 அன்று ‘அரசு மற்றும் அரசு உதவிப்பெறும் பள்ளிகளில் உள்ள ஆசிரியர்கள் தகுதித்தேர்வில் கட்டாயம் தேர்ச்சிப் பெற வேண்டும்’ என மாண்பமை உச்சநீதிமன்றம் தீர்ப்பு வழங்கியது. உடனடியாக அதே நாளில் செய்தியாளர்களைச் சந்தித்து ‘இத்தீர்ப்பிற்கு எதிராக மேல்முறையீடு செய்யப்படும்’ என திராவிட மாடல் அரசின் அன்றைய முதலமைச்சர் அவர்களின் ஆணைக்கிணங்க அறிவித்தோம். அண்ணா நூற்றாண்டு நூலகத்தில் ஆசிரியர் சங்கப் பிரதிநிதிகளைச் சந்தித்து அவர்களின் கருத்துக்களைக் கேட்டறிந்தோம். ‘மேல்முறையீடு செய்யப்படும்’ என்ற தலைவர் அவர்களின் அறிவிப்பை ஆசிரியர் சங்கங்கள் வரவேற்றார்கள். அதற்காக என்னை நேரில் சந்தித்து நன்றியும் தெரிவித்தார்கள்.

**‘திராவிட மாடல்’ அரசு துணை நிற்கும் என்று அன்றே கூறினோம்!**

2025 செம்படம்பர் 11 அன்று தமிழ்நாடு அரசின் சார்பாக சீராய்வு மனுவும் தாக்கல் செய்யப்பட்டது. தொடர்ந்து கழகமும், திராவிட மாடல் அரசும் ஆசிரியர்களின் மனமறிந்து அவர்களை காக்கும் பணிகளில் இறங்கியது. சீராய்வு மனு மீதான தீர்ப்பு வெளியான அடுத்த நாளே ஆசிரியர் சங்க பிரதிநிதிகளை பேராசிரியர் அன்பழகனார் கல்வி வளாகத்தில் சந்தித்து ஆசிரியர்களின் கருத்துக்களையும் கேட்டறிந்தோம். இரண்டு முறை கருத்துக்கேட்பு கூட்டம் நடத்தினோம். அதற்கு அடுத்த நாளே 2025 நவம்பர் 22 அன்று அன்றைய முதலமைச்சர் அவர்களை பாராளுமன்ற உறுப்பினர் மூத்த வழக்கறிஞர் வில்சன் அவர்களோடு இணைந்து சந்தித்து ஆசிரியர்கள் தெரிவித்த கருத்துக்களை எடுத்துக் கூறினோம்.

ஆசிரியர்களின் கருத்துக்களை அடிப்படையாக கொண்டு நவம்பர் 25 அன்று இந்திய பிரதமருக்கு கடிதம் எழுதினார் அன்றைய முதலமைச்சர் அவர்கள். அக்கடிதத்தில் ‘ஆசிரியர்களை பாதுகாப்பதுடன் குழந்தைகளின் கல்வியும் பாதிக்கப்படக்கூடாது என்றால் சட்டத்தில் தேவையான திருத்தம் செய்ய வேண்டும்’ என்பதை வலியுறுத்தினார்.

தொடர்ந்து, அன்றைய தமிழ்நாடு முதலமைச்சர் அவர்களோடு நானும் பள்ளிக்கல்வித்துறை உயரதிகாரிகளும் உடனடியாக ஆலோசனை நடத்தினோம். மூத்த ஆசிரியர்கள் ஒருவர் கூட பாதிக்கப்படாமல் தமிழ்நாடு அரசு தொடர்ந்து பாதுகாக்கும் என்றும், ஆசிரியர்கள் வாழ்வாதாரம் பாதிக்கப்படாமல் இருக்கத் திராவிட மாடல் அரசு துணை நிற்கும் என்றும் அன்றைய தமிழ்நாடு முதலமைச்சர் அவர்கள் விரிவான அறிக்கையின் மூலம் தெரிவித்தார்கள்.

**ஒன்றிய அரசை வலியுறுத்தி தீர்மானம்!**

நவம்பர் 29 அன்று கழகத் தலைவர் அவர்களின் தலைமையில் நடைபெற்ற கழக நாடாளுமன்ற உறுப்பினர்கள் கூட்டத்தில் ‘பணி நியமனம் பெற்று தற்போது ஆசிரியர்களாக பணியாற்றுபவர்களின் பணி மற்றும் பதவி உயர்வினை ஒன்றிய அரசு பாதுகாத்திடுக’ என்ற தீர்மானமும் நிறைவேற்றப்பட்டது.

“இந்தியா முழுவதும் உள்ள ஆசிரியர்களைப் பாதுகாக்கப் பாராளுமன்றத்தில் சட்டத்திருத்தம் கொண்டுவர வலியுறுத்த வேண்டும்” என்கிற கழகத் தலைவர் அவர்களின் அறிவுரைப்படி, திராவிட முன்னேற்றக் கழகத்தின் பாராளுமன்ற உறுப்பினர்கள் கேள்வி நேரத்தில் சட்டத்திருத்தம் குறித்து வலியுறுத்தினார்கள். கழக மாநிலங்களவை உறுப்பினர் திரு.பி.வில்சன் அவர்கள் 2025 டிசம்பர் 12 அன்று ஆசிரியர் தகுதித் தேர்வு குறித்த கழகத் தலைவர் அவர்களின் குரலை நாடாளுமன்றத்தில் பதிவு செய்து, ஆசிரியர்களுக்காக சட்டத்திருத்தம் செய்யப்பட வேண்டும் என வலியுறுத்தினார்.

**தகுதி மதிப்பெண்ணை குறைத்து அரசாணை!**

இதற்கிடையில் ஆசிரியர் சங்கங்களின் கோரிக்கைகளை ஏற்று திராவிட மாடல் அரசின் சிறப்பு முயற்சியால் “ஆசிரியர்களைப் பாதுகாப்பதற்காக சிறப்பு தகுதித் தேர்வு நடத்தப்படும்” என்று அரசாணை: 231, நாள் 25.10.2025 அன்று வெளியிடப்பட்டது. தொடர்ந்து வந்த நவம்பர் மாதத்தில் நடைபெற்ற ஆசிரியர் தகுதித் தேர்வில் ஆசிரியர்களின் நலன் கருதி, தேர்ச்சி பெறுவதற்கான மதிப்பெண்ணில் 5 சதவீதத் தளர்வும் வழங்கப்பட்டது. இதனால் ஏராளமான ஆசிரியர்கள் பயன்பெற்றுள்ளார்கள்.

2026 ஜனவரி 28 அன்று ஆசிரியர் தகுதித்தேர்வில் தகுதி மதிப்பெண்களை குறைத்து அரசாணை வெளியிட்டார் அன்றைய முதலமைச்சர் அவர்கள். ஆதிதிராவிடர் மற்றும் பழங்குடியினர் பிரிவினருக்கு 55 சதவீதத்திலிருந்து 40 சதவீதமாகவும், பிற்படுத்தப்பட்டோர் மிகவும் பிற் படுத்தப்பட்டோர் ஆகிய பிரிவின ருக்கு 55 சதவீதத்திலிருந்து, 50 சதவீதமாகவும் மாற்றி அரசாணை வெளியிடப்பட்டது. மாற்றுத்திறன் கொண்ட தேர்வர்களின் கோரிக்கையை ஏற்று பிப்ரவரி 25 அன்று குறைந்தபட்ச தேர்ச்சி மதிப்பெண் 40 சதவீதம் எனவும் நிர்ணயித்து அரசாணை வெளியிடப்பட்டது.

மேலும், சிறப்பு ஆசிரியர் தகுதித் தேர்வில் அனைத்து ஆசிரியர்களுக்கும் உதவிடும் வகையில், அதற்கான பயிற்சிக் கட்டகங்கள்(Training Modules) தயாரிக்கும் பணி மற்றும் இணையவழிப் பயிற்சி வழங்கும் பணியானது, ஆசிரியர் பயிற்சி மற்றும் ஆராய்ச்சி நிறுவனத்திடம்(SCERT) ஒப்படைக்கப்பட்டது.

**சட்டப் போராட்டத்தை த.வெ.க. அரசு மேற்கொள்ளவில்லை!**

இச்சூழலில்தான் 2026 மே 29ஆம் தேதி சீராய்வு மனு மீது தீர்ப்பளித்த உச்சநீதிமன்றம் ‘தகுதித்தேர்வில் இருந்து விலக்களிக்க மறுத்துவிட்டது’. இதன் பிறகான சட்டப் போராட்டத்தை புதிதாக வந்த த.வெ.க. அரசு மேற்கொள்ளவில்லை என்பதே உண்மை!

முந்தைய நமது திராவிட மாடல் அரசு ஆசிரியர்களுக்காக செய்த சிறப்பு செயல்பாடுகளையும் முடக்கும் வேகத்தில்தான் இந்த அரசு செயலாற்றியது. சிறப்பு ஆசிரியர் தகுதித்தேர்வர்களுக்காக பயிற்சி கையேடுகள் வழங்குவதிலேயே தாமதம் ஏற்படுத்திய அரசுதான் இவ்வரசு. அதோடு நில்லாமல் உயர்நீதிமன்றத்தில் ‘தகுதித்தேர்விற்கான மதிப்பெண்களை குறைக்க முடியாது’ என்று ஆணவமாகவும் வாதாடி உள்ளது என்பது மாற்றத்தை அல்லாமல் ஆசிரியர்கள் மத்தியில் ஏமாற்றத்தைதான் கொடுத்துள்ளது.

இந்த புதிய அரசின் செயல்பாடுகளை என்னவாக விளங்கிக்கொள்ள வேண்டும்? நீதிமன்றத்தில் வாதாடிய அரசின் முகம்தான் உண்மை முகமா? சட்டமன்றத்தில் தீர்மானம் நிறைவேற்றிய அரசின் முகம்தான் உண்மை முகமா?

இரட்டை நிலைப்பாட்டை எடுத்துக் கூறுவதுடன் கழகத் தலைவர் அவர்களின் வழிகாட்டுதலின்படி ஆசிரியப் பெருமக்களின் நலனுக்காக என்றும் குரல் கொடுப்போம்.

இவ்வாறு அன்பில் மகேஸ் பொய்யாமொழி தமது அறிக்கையில் கூறியுள்ளார்.

---

### அகஸ்தீஸ்வரம் வடக்கு ஒன்றியம்

## இரவிபுதூர் ஊராட்சி தி.மு.க. நிர்வாகிகள் ஆலோசனைக் கூட்டம்!

### மாவட்டச் செயலாளர் ரெ.மகேஷ் ஆலோசனைகள் வழங்கினார்!




கன்னியாகுமரி, ஆக. 27 -

கன்னியாகுமரி கிழக்கு மாவட்டம், அகஸ்தீஸ்வரம் வடக்கு ஒன்றியம், இரவிபுதூர் ஊராட்சி தி.மு.க. நிர்வாகிகள் ஆலோசனைக் கூட்ட மானது 25.08.2026, செவ்வாய்க்கிழமை அன்று மாலை 6.00 மணியளவில் அகஸ்தீஸ்வரம் வடக்கு ஒன்றிய செயலாளர் எம். மதியழகன் தலைமையில் இரவிபுதூர் பகுதியில் வைத்து நடைபெற்றது.

கூட்டத்தில் சிறப்பு விருந்தினராக கன்னியாகுமரி கிழக்கு மாவட்டச் செயலாளர் வழக்கறிஞர் ரெ.மகேஷ்கலந்துகொண்டு கழக வளர்ச்சி பணிகள் தொடர்பாக ஆலோசனைகள் வழங்கி சிறப்புரையாற்றினார்.

ஆலோசனைக் கூட்டத்தில் மாநில கலை, இலக்கிய, பகுத்தறிவுப் பேரவை செயலாளர் என்.தில்லை செல்வம், அகஸ்தீஸ்வரம் வடக்கு ஒன்றிய அமைப்பு சாரா ஓட்டுநர் அணி அமைப்பாளர் J.ஆன்றோ போஸ்கோ, கழக நிர்வாகிகள் பி.முருகன், மாது, P. பரத், T.ஹரிகரன், V. மீனாட்சி சுந்தரம், பகவதி, மகேஸ்வரன், V.அனுஷா, சங்கர், குமார், சொக்கலிங்கம், சிவம் உட்பட ஒன்றிய நிர்வாகிகள், கிளை கழக செயலாளர்கள், கழக சார்பு அணிகளின் நிர்வாகிகள், BLA2, BLC, BDA மற்றும் கழக நிர்வாகிகள் பலர் கலந்து கொண்டனர். கூட்டத்தில் கீழ்க்கண்ட தீர்மானங்கள் நிறைவேற்றப்பட்டன.

தீர்மானம்: 1 வருகின்ற உள்ளாட்சித் தேர்தலில் வெற்றி பெறும் வகையில் அதற்கான களப் பணிகளை இன்றே தொடங்கி செயல்படுத்துவது என தீர்மானிக்கப்பட்டது.

தீர்மானம்: 2 கழக பணியினை தொய்வின்றி நடத்த கழக தலைவர் கட்டளையை ஏற்று நடக்கவும்,மாவட்ட கழகம் அறிவிக்கும் பணிகளை செவ்வனே நிறைவேற்றி கழகம் மீண்டும் ஆட்சி அமைக்க அயராது பாடுபட வேண்டும் என தீர்மானிக்கப்பட்டது.

தீர்மானம்: 3 கடந்த தமிழ்நாடு சட்டமன்றத் தேர்தலில் கழக வேட்பாளருக்காக உழைத்த கழக நிர்வாகிகளுக்கும், மதச் சார்பற்ற முற்போக்கு கூட்டணிகட்சியினருக்கும் மற்றும் வாக்களித்த அனைத்து வாக்காளப் பெருமக்களுக்கும்மாவட்ட தி.மு.கழகம் மற்றும் அகஸ்தீஸ்வரம் வடக்கு ஒன்றிய தி.மு.க. சார்பாக நன்றி தெரிவிக்கப்பட்டது.

---

### பருவமழைக் காலத்தில் மனித உயிர்களைக் காக்க

## அரசு தீவிர நடவடிக்கை எடுக்க வேண்டும்!

### பேரவையில் — முன்னாள் அமைச்சர் பி.கே.சேகர்பாபு வலியுறுத்தல்!



சென்னை, ஆக. 27-

சென்னை, பாடி, புதுநகர் 10வது தெருவை சேர்ந்த கலாவதி 59 இவர் அண்ணா நகரில் உள்ள சர்ச்சுக்கு சென்று விட்டு இரவு இரண்டாவது அவென்யூ வழியாக டவர் மெட்ரோ ரயில் நிலையம் நோக்கி நடந்து சென்ற போது அங்கு மாநகராட்சியால் தோண்டப்பட்டு இருந்த மழைநீர் வடிகால் பள்ளத்தில் தேங்கியிருந்த மழை நீரில் தவறி விழுந்து துடித்துள்ளார். அங்கிருந்தோர் அவர் மின்சாரம் பாய்ந்து தான் துடித்து கொண்டிருக்கின்றார் என அருகில் சென்று பார்க்க பயந்து காவல் துறையினருக்கு தகவல் தெரிவித்த நிலையில் அவர்கள் வந்து அவரை மீட்டு பரிசோதித்த போது அவர் ஏற்கனவே உயிரிழந்தது தெரிய வந்தது.

உயிரிழந்த பெண்மணிக்கு நேர்ந்த நிலை போன்று யாருக்கும் இனி வரக்கூடாது என்பதற்காக இது குறித்து சட்டமன்றத்தில் பி.கே.சேகர்பாபு கவன ஈர்ப்பு தீர்மானம் கொண்டு வந்து பேசியதாவது:-

பேரவை தலைவர் அவர்களே!

சமீபத்தில் கால்வாயில் விழுந்து கலாவதி என்ற ஒருவர் உயரிழந்ததாக வெளியான செய்திகள் குறித்து அரசின் கவனத்திற்கு கொண்டு வருகிறேன்.

உயிரிழந்தது மழை நீர் கால்வாயிலா அல்லது மின்கசிவு காரணமா என்பதில் சந்தேகங்கள்நிலவுகின்றன.

மாநகராட்சி தரப்பில் அது குறித்து மறுப்பு அறிக்கை வெளியிடப்பட்டிருந்தாலும் மழைக்காலம் தொடங்க உள்ள சூழலில் இதுபோன்ற பள்ளங்களால் பொதுமக்களின் உயிர்களுக்கு பெரும் அச்சுறுத்தல் ஏற்பட்டுள்ளது. மேலும் சென்னை மற்றும் தமிழகத்தின் பல்வேறு பகுதிகளில் மெட்ரோ பணிகள் மற்றும் கால்வாய் தோண்டும் பணிகள் தொடர்ந்து நடைபெற்று வருவதை சுட்டிக் காட்டிய அவர் அத்தகைய இடங்கள் அனைத்திலும் தடுப்புகள் அமைப்பது உள்ளிட்ட தகுந்த பாதுகாப்பு சூழலை உருவாக்க வேண்டும்.

விலைமதிப்பற்ற மனித உயிர்களை காக்க அரசு உடனடி நடவடிக்கை எடுக்க வேண்டும்.

இவ்வாறு பி.கே.சேகர்பாபு பேசினார்.

---

## போக்குவரத்துப் பணிமனைகளை தனியார் மயமாக்கும் த.வெ.க. அரசுக்கு கண்டனம்!

### போக்குவரத்து தொழிலாளர்கள் ஆர்ப்பாட்டம்!

சென்னை, ஆக. 27 -

அரசு போக்குவரத்து கழக பணிமனைகளை தனியார்மயமாக்க கூடாது உள்ளிட்ட 7 அம்ச கோரிக்கைகளை வலியுறுத்தி சென்னையில் போக்குவரத்து தொழிலாளர்கள் காத்திருப்பு போராட்டத்தில் ஈடுப்பட்டனர்.

தனியார் மூலம் மின்சார பேருந்துகளை இயக்காமல் தமிழ்நாடு அரசே மின்சார பேருந்துகளை இயக்க வேண்டும் உள்ளிட்ட 7 அம்ச கோரிக்கைகளை வலியுறுத்தி சென்னை பல்லவன் சாலையில் உள்ள மாநகரப் போக்குவரத்து கழக மேலாண் இயக்குனர் அலுவலகம் வெளியே சி.ஐ.டி.யு தொழிற்சங்கம் சார்பில் தொடர் முழக்க காத்திருப்பு போராட்டம் நடைபெற்று வருகிறது.

போராட்டத்தில் 100க்கும் மேற்பட்டவர்கள் கலந்து கொண்டு, போக்குவரத்து துறையில் உத்தரப்பிரதேச தொழிலாளர்களை அமர்த்தக் கூடாது என வலியுறுத்தி த.வெ.க. அரசுக்கு எதிராக முழக்கங்களை எழுப்பினர்.

பின்னர் செய்தியாளர்களிடம் பேசிய அரசு போக்குவரத்து ஊழியர் சங்க பொதுச்செயலாளர் தயானந்தன், சென்னையில் அரசு போக்குவரத்து கழக பணிமனைகள் மூடப்பட்டு தனியார்மயம் ஆக்கப்படுவதாக வேதனை தெரிவித்தார்.

7 போக்குவரத்து பணிமனைகளில் முதற்கட்டமாக 2 போக்குவரத்து பணிமனைகள் தனியார் மயமாக்கப்பட்டுள்ளதாகவும் அவர் குற்றம்சாட்டினார்



வேலூர் வடக்கு மாவட்ட தி.மு.க. அவசர செயற்குழுக் கூட்டம் வேலூர் மாவட்ட பொருளாளர் சி.நரசிம்மன் தலைமையில் நடைபெற்ற கூட்டத்தில் வேலூர் வடக்கு மாவட்ட பொறுப்பாளர், வேலூர் நடாளுமன்ற உறுப்பினர் டி.எம்.கதிர் ஆனந்த் தீர்மானங்கள் குறித்து விளக்கி பேசினார். கூட்டத்தில் மாநில, மாவட்ட, ஒன்றிய, பகுதி, பேரூர் கழக நிர்வாகிகள், தலைமைச் செயற்குழு மற்றும் பொதுக்குழு உறுப்பினர்கள் அணிகளின் மாவட்ட அமைப்பாளர்கள் கலந்துகொண்டு சிறப்பித்தனர்.

---

## அதானே!




குன்றுகள் மலைகள் காணாமல்
போய் விட்டதாக சட்டமன்றத்தில் படம் காட்டியிருக்கும்
பல் டாக்டருக்குத் தெரியாதோ

அப்படிப்பட்ட
பல மலைகளை இன்று வரையில் விழுங்கிக் கொண்டிருக்கும்அந்தக்
"கல்" டாக்டரை கட்சியில் சேர்த்துள்ள தங்கள் தலைமை
அந்த மலை விழுங்கியைத் தான் விராலி "மலை" க்கு வேட்பாளர்
ஆக்கப் போகிறது என்பது...

இப்பச் சொல்லுங்க

தங்கத்தை
தரம் பார்த்து சொல்ல உறைகல்லுக்குத் தானே
உரிமை உண்டு...

**என்னநாஞ் சொல்றது.**



**மருது அழகுராஜ்**

கழக செய்தித் தொடர்புக் குழு
துணைத் தலைவர்